## அவசர கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் டிசம்பர் மாதம் (18.12.2019) ஆம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-20 ன் கீழ் கூடலூர் நகராட்சி கீழ் கானும் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊராக வளர்ச்சி முகமை தேனி அவர்களின் செயல்முறை ஆணைகள் **ந.க.எண்.2321/2018/திம நாள்.22.10.2019** ஆம் நாளன்று வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியின்படியும் மற்றும் மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் ,மதுரை அவர்களின் செயல்முறை கள் **ந.க.எண்.5240/2019/பி2 நாள்.29.10.2019** ன்படி பெறப்பட்ட தொழில் நுட்ப அனுமதியின்படியும் கீழ்கானும் சாலைப்பணியினை மேற்கொள்ள 05.12.2019 ஆம் நாள் மின்னனு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் நேரிடையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலணைக்கும்.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-13 ஊமையன் தொழு சாலைக்கு CMP முறையில் இணைப்பு சாலை அமைத்தல் . | 30.00 | **திரு.ஆர்.பரமானந்தன்** | 0.01% | – |
| | | | **திருகே.வனராஜ்** | – | 0.06% |

**அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.01% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.ஆர்.பரமானந்தன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.782,அங்கீகரிக்கப்பட்டடது.**

.

**பொருள்.2**

கூடலூர் நகராட்சி ஆணையாளர் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் வாகனம் TN-60 R-6378ற்கு ஆயில் சர்வீஸ்(ம)சிறு பழுதுகள் சரி செய்வதற்கு **18.11.19** அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,பரிசீலனைக்கும் **(ந.க.எண்.883 /2019/இ1)**

| வ.எண் | பெயர்(ம)முகவரி | தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குமரன் கார் கேஸ்-கம்பம் | ரூ.8,455/– |
| 2. | A.M மோட்டார்ஸ் - கம்பம் | ரூ.8,270/- |
| 3. | அகரம் மோட்டார்ஸ் - கம்பம் | ரூ.7,205/- |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில்-அகரம் மோட்டார்ஸ்- கம்பம் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்
3. அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தாரின் மூலம் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
4. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.783,அனுமதிக்கப்பட்டடது.**

பொருள்.3

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-7ல் சந்தை வளாகத்தினுள் உள்ள ஆண்கள் உபயோகத்தில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள வாம்பே கழிவறையினை மராமத்து பணிகள் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக ரூ.5,00,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.784,அனுமதிக்கப்பட்டது**